நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றம், திண்டுக்கல்

முன்னிலை : திரு. M. முருகன், M.L.,
நீதித்துறை நடுவர் எண் 1, திண்டுக்கல்

2020 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4 ஆம் நாள் சனிக்கிழமை

C. C : 71/ 2019

அரசுக்காக, சார்பு ஆய்வாளர்
திண்டுக்கல் நகர் தாலுகா காவல் நிலைய
குற்ற எண் : 629 /2018 - குற்ற முறையீட்டாளர்

/ எதிர் /

ராஜ்குமார் வயது 26/2018
த.பெ. பெருமாள்
கிழக்கு குழிப்பட்டி,
கருதனம்பட்டி,
சீலப்பாடி, திண்டுக்கல் - எதிரி

இவ்வழக்கானது 02.01.2019ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 03.01.2019 ஆம் தேதியில் மேற்படி எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்த வழக்கில் அரசுக்காக குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு. டி.பாலச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இந்த நீதிமன்றம் இன்று (04.01.2020) வழங்கிடும்

**தீர்ப்புரை**

கடந்த 20.09.2018ம் தேதி மதியம் 3.45 மணிக்கு TN 57 N1496 என்ற அரசு பேருந்தை அதன் ஓட்டுனரான சாட்சி ராஜசேகரன் ஓட்ட நடத்துனராக வாதி கனகராஜ் இருந்துகொண்டு திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் பயணிகளை ஏற்றிக்கொண்டு தாமரைப்பாடி அருகே உள்ள அந்தோணியார் கல்லூரிக்கு செல்வதற்காக திண்டுக்கல் திருச்சி ரோட்டில் இருந்த வேகத்தடையில் பேருந்தை மெதுவாக ஓட்டிச் சென்றபோது பின்னால் அதே திசையில் TN 57P 5472 Hero Honda Splendor Motor cycle-ன் பின்னால் மல்லுச்சாமியை உட்கார வைத்துக்கொண்டு எதிரி ராஜ்குமார் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று வேகத்தடையில் ஏற்றி இறக்கி கீழே விழுந்ததில் பேருந்தின்

பின்சக்கரம் மல்லுச்சாமி மீது ஏறி தலை மற்றும் உடலில் பலத்த காயம்பட்டு சம்பவயிடத்திலேயே மல்லுச்சாமி இறந்துவிட்டதாகவும் எனவே எதிரி இதச 279,304(ஏ) பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக திண்டுக்கல் நகர் தாலுகா காவல் நிலைய ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அவர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு.207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரி பிரிவுகள்.279,304(ஏ)I.P.C-ன் கீழ் குற்றம் புரிந்திருக்கலாம் என முதல்நிலை நோக்கு ஆதாரங்கள் இருப்பதாக கருதி எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் அளித்து, எதிரியிடம் மேற்படி குற்றம் குறித்து தமிழில் விளக்கி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்து, தான் குற்றவாளி அல்ல என்று கூறினார்.

3. அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் மூலமாக அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப் பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

4. அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு :

அ.சா.1 கனகராஜ் என்பவர் தன்சாட்சியத்தில் கடந்த 20.09.2018 அன்று தான் நடத்துனராகபம் ராஜசேகரன் என்பவர் ஓட்டுநராகவும் டிஎன்.57 என்.1496 என்ற அரசு பேருந்தினை மாலை 3.20 மணிக்கு திண்டுக்கல் பஸ்ஸ்டாண்டிலிருந்து பேருந்தினை எடுத்துக்கொண்டு அந்தோணியார் கல்லூரிக்கு சென்றதாகவும் 3.45 மணியளவில் சீலப்பாடி வேகத்தடை அருகே சென்றபோது தங்களது பேருந்திற்கு இடதுபுறம். இருசக்கரவாகனத்தில் வேகத்தடை இருப்பதை கவனிக்காமல் அதிகவேமாக இருசக்கரவாகனத்தினை ஒருவர் ஓட்டிவந்ததாகவும் அவரது பின்புறம் ஒருவர் உட்கார்ந்திருந்ததாகவும் தங்களது பேருந்தை வேகமாக முந்திச்செல்ல முயன்றபோது வேகத்தடை இருப்பதை கவனிக்காமல் சென்றதால் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும் இருசக்கரவாகனத்தில் பின்னால் இருந்த நபர் தங்களது பேருந்தின் பின்சக்கரத்தின் அடியில் மாட்டி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், பின்னர் உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு தாலுகா காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்த நபரை அடையாளம் தெரியும் என்றும் அவரது பெயர் ராஜ்குமார் என்று சொன்னார்கள்

என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் தான் அளித்த புகார் அ.த.சா.ஆ,1 என்றும் சாட்சியளித்துள்ளார்.

அ.சா.2 அனந்தராமன் என்பவர் தன் சாட்சியத்தில் கடந்த 20.09.2018 அன்று மாலை சுமார் 3.45 மணிக்கு சீலப்பாடி ரவுண்டானா அருகே உள்ள இடதுபுறகடையில் டீ குடித்துக்கொண்டிருந்ததாகவும் அப்போது TN 57 N 1496 என்ற அரசு பேருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தது என்றும் முன் வீல் வேதத்தடையில் ஏறி இறங்கியிருந்தது என்றும் அப்போது பேருந்தின் இடதுபுறம் இருசக்கரவாகனத்தில் வந்த நபர்கள் பேருந்தினை இடதுபுறமாக முந்தி செல்ல முயன்றபோது இருசக்கரவாகனத்தில் பின்புறம் இருந்த நபர் பேருந்தின் பின்சக்கரத்தில் அடியில் மாட்டிக் கொண்டதாகவும், அங்கிருந்தவர்கள் சத்தம் போடவே பேருந்தின் ஓட்டுநபர் பஸ்சை நிறுத்திவிட்டு கீழே இறங்கி வந்ததாகவும் பேருந்தின்அடியில் மாட்டிக்கொண்ட நபர் அங்கேயே இறந்துவிட்டதாகவும், ராஜ்குமார் என்ற நபர் இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்ததாகவும் சாட்சியளித்துள்ளார்.

அ.சா.3.ராஜசேகரன் என்பவர் தன் சாட்சியத்தில் கடந்த 20.09.2018 அன்று சுமார் 3.20 மணியளவில் TN 57 N 1496 என்ற அரசு பேருந்தை திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து அந்தோணியார் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்ததாகவும், சீலப்பாடி ரவுண்டானா அருகே உள்ள வேகத்தடையில் பேருந்தை ஓட்டி இறக்கும்போது இருசக்கரவாகனத்தில் ராஜ்குமார் என்பவர் வாகனத்தினை ஓட்டிவந்து வேகத்தடையில் ஏறி இறக்கும்போது இருசக்கரவாகனத்தில் பின்னால் இருநத நபர் நிலை தடுமாறி பேருந்தின் பின்பக்க சக்கரத்தின் அடியில் மாட்டிக்கொண்டதாகவும் தான் வண்டியை பிரேக் அடித்தபோது வண்டி சிறிது நேரம் நின்றது என்றும் இருசக்கரவாகனத்தை ஓட்டவந்த நபர் நின்று கொண்டிருந்ததாகவும் அவருக்கு காயம் ஏதும் இல்லை என்றும் இருசக்கரவாகனத்தில் பின்னால் இருந்த நபர் பேருந்தில் பின்பக்கசக்கரத்தில் மாட்டி இறந்துவிட்டதாகவும் சாட்சியளித்துள்ளார்.

அ.சா.4 செந்தில்குமார் என்பவர் தன் சாட்சியத்தில் கடந்த 20.09.2018 அன்று தான் டீக்கடையில் டீ குடித்துக்கொண்டிருந்தபோது ஒரு பேருந்து திண்டுக்கல்லில் இருந்து திருச்சி ரோட்டில் வந்துகொண்டிருந்தது என்றும் அப்போது வேகத்தடை அருகே வரும்போது பேருந்து முன்னால் சென்ற இருசக்கரவாகனத்தில் இரண்டு நபர்கள் வந்ததாகவும் வண்டியை ஓட்டி வந்தவர் வண்டி கீழே விழுந்ததும் விழுந்துவிட்டதாகவும், இருசக்கரவாகனத்தில் பின்னால் இருந்த மற்றொரு நபர் பேருந்தின் இரண்டு சக்கரங்களுக்கும் இடையே

மாட்டிக்கொண்டதாகவும், அங்கேயே இறந்துவிட்டதாகவும் சாட்சியளித்துள்ளார்.

அ.சா.5. ஜோஸ்வா என்பவர் தன் சாட்சியத்தில் கடந்த 21.09.2018 அன்று சீலப்பாடி பிரிவு அருகே பஸ்விபத்து நடந்ததாகவும், அதன்வழியாக தான் நடந்து கொண்டிருந்தபோது போலீசார் வந்திருந்ததாகவும், அங்கு முதல்நாள் நடந்த விபத்து தொடர்பாக விசாரிக்க வந்ததாகவும், படம் வரைந்து கையொப்பம் கேட்டதாகவும், கையொப்பம் செய்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அது அ.த.சா.ஆ.2 என்றும் சாட்சியளித்துள்ளார்.

அ.சா.6. முருகன் என்பவர் தன் சாட்சியத்தில், கடந்த 21.09.2018 அன்று சுமார் 6.45 மணியளவில் தான் சீலப்பாடி பைபாஸ் அருகே இருந்தபோது அங்கு முதல் நாள் நடந்த விபத்து தொடர்பாக போலீசார் வந்திருந்ததாகவும் படம் வரைந்து கையொப்பம் கேட்டதாகவும், செய்து கொடுத்ததாகவும், மகஜரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அது அ.த.சா.ஆ,3 என்றும் சாட்சியளித்துள்ளார்.

அ.சா.7. சார்பு ஆய்வாளர். முரளி என்பவர் தன் சாட்சியத்தில் கடந்த 20.09.2018ம் தேதி 17 மணிக்கு திண்டுக்கல் தாலுகா காவல்நிலைய பொறுப்பில் இருந்தபோது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக திண்டுக்கல் கிளை எண். 2 நடத்துனராக பணிபுரிந்த சின்னச்சாமி மகன் கனகராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண். 629 /2018 இதச பிரிவு 279, 304(ஏ) பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் வழக்கின் மேல்விசாரணைக்கான காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ,4 என்றும் சாட்சியளத்துள்ளார்.

அ.சா.8.மோட்டார்வாகன ஆய்வாளர் விஜயகுமார் என்பவர் தன் சாட்சியத்தில் கடந்த 22.09.2018 அன்று தான் பணியில் இருந்தபோது திண்டுக்கல் தாலுகா காவல்நிலைய குற்ற எண். 629 /2018 அன்று தான் இதச 279,304(ஏ) வழக்கில் விபத்துள்ளான அரசு பேருந்து TN 57 N 1496 ஐ வேண்டுகோள்கடிதம் பெறப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றும் ஆய்வில் எந்த ஒரு சேதமும் ஏற்படவில்லை என்றும் விபத்து வாகனத்தின் எவ்வித இயந்திரக்கோளாறினாலும் ஏற்படவில்லை என தான் வழங்கிய சான்று அ.த.சா.ஆ,5 என்றும், அதே வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு இருசக்கரவாகனமான TN 57 P 5472 ஐ ஆய்வு கொண்டதில் விபத்து வாகனத்தின் எவ்வித இயந்திரக்கோளாறினாலும் ஏற்படவில்லை என தான் வழங்கிய

சான்று அ.த.சா.ஆ,6 என்றும், சாட்சியளித்துள்ளார்.

அ.சா.9 மருத்துவர். செந்தில்குமரன் என்பவர் தன் சாட்சியத்தில் 21.09.2018 அன்று தாலுகா காவல் நிலைய வேண்டுகோள்கடிதத்தின்படி விபத்தில் இறந்த நபரை பிரேத ஆய்வு மேற்கொண்டதில் மேற்படி விபத்தில் இறந்த நபர் அவருக்கு ஏற்பட்டதலைக்காயத்தினாலும், அதிகரத்தப்போக்கினாலும் இறந்திருக்கலாம் என தான் வழங்கிய சான்று அ.த.சா.ஆ.7 என்றும் சாட்சியளித்துள்ளார்.

அ.சா.10 முருகேஷ்வரி என்பவர் கடந்த 20.09.2018 அன்று தான் சௌந்தராஜா பங்களாவில் வேலை செய்துகொண்டிருந்தபோது தனக்கு புதுநம்பரில் இருந்து போன் வந்தது என்றும் தனது கணவர் அவருக்கு தெரிந்தவருடன் இருசக்கரவாகனத்தில் சென்றபோது சீலப்பாடி பைபாஸ் அருகே வேகத்தடையில் ஏறிஇறங்கும்போது பேருந்து மோதி விபதது ஏற்பட்டதாக சொன்னார்கள் என்றும் தான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது தன் கணவர் அங்கு இல்லை என்றும் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனை எடுத்துச்சென்றதாக சொன்னார்கள் என்றும் பேருந்து இருந்தது, டிரைவர் இல்லை என்றும் டிரைவர் பெயர் ராஜசேகர் என்று சொன்னார்கள் என்றும் புகாரை அருகில் இருந்த டீக்கடையில் இருந்த நபர் கொடுத்தார் என்றும் சாட்சியளித்துள்ளார்.

அ.சா.11.தங்கவேல் என்பவர் தன் சாட்சியத்தில் கடந்த 21.01.2018ம் தேதி தாலுகா காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்தபோது தாலுகா காவல்நிலைய குற்ற எண். 629 /18 இதச 279,304(ஏ) பிரிவுகளின் கீழான வழக்கு விபத்தில் இறந்த மல்லுச்சாமி என்பவரது பிரேதபரிசோதனைக்கு தபாலைப் பெற்று காலை 10 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு பிரேதபரிசோதனை புலன்விசாரணைக்கு உதவியாக இருந்து இறந்த மல்லுச்சாமி உடலின் அங்க மச்ச அடையாளங்களை காண்பித்து பரிசோதனை முடிந்து உறவினரிடம் உடலை ஒப்படைத்ததாகவும் காவல்ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியளித்துள்ளார்.

அ.சா.12. காவல் ஆய்வாளர் ஜெயச்சந்திரன் என்பவர் தன் சாட்சியத்தில் கடந்த 21.09.2018 ல் திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது குற்ற எண். 629 /18 இதச 279,304(ஏ) பிரிவுகளின் கீழான வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று பார்வையிட்டு திண்டுக்கல் டு திருச்சி ரோடு சீலப்பாடி பைபாஸ் வேகத்தடை அருகே சென்று காலை 6.30 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் சம்பவஇடத்தைப் பார்வையிட்டு மகஜர், வரைபடம் தயார் செய்ததாகவும் பின்னர் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு காலை 8.10

மணிக்கு சென்று பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் இறந்த மல்லுச்சாமி என்பவர் உடல்மீது பிரேதவிசாரணை மேற்கொண்டு பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்ததாகவும், பிரேத பரிசோதனைக்காக முதல்நிலை காவலர் தங்கவேல் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பியதாகவும் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 22.09.2018ம் தேதி TN 57 N 1496 பேருந்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்காக வேண்டுகொள்கடிதம் கொடுத்தனுப்பியும் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அன்றையதினமே மாலை 18 மணிக்கு எதிரி ராஜ்குமார் என்பவர் கைது செய்து விசாரணை செய்து பின்பு தக்க ஜாமீனில் விடுவித்ததாகவும், மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள்கடிதம் அனுப்பியதாகவும், மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவருக்கு ஓட்டுநர் உரிமமும். வாகன காப்புச்சான்றும் இல்லாமல் இருந்ததை விசாரணையில் தெரிந்து கொண்டு அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாகவம். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் புலன்விசாரணை முடித்து எதிரி மீது இதச 279, 304(ஏ) பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் தான்தயார் செய்த மகஜர், வரைபடம் முறையே அ.த.சா.ஆ,8 மற்றும் 9 என்றும் பிரேதவிசாரணை அறிக்கை அ.த.சா.ஆ,10 என்றும் சாட்சியளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவடைந்ததும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு.313(1)(ஆ) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவிய போது எதிரிகள் பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும் கூறினாாகள். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. தீர்வு :** இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான இ.த.ச பிரிவுகள். 279,304(ஏ) யை அரசு தரப்பு தமது வழக்கை சாட்சியங்கள் மூலம் எவ்வித சந்தேகத்திற்கிடமின்றியும் நிரூபித்துள்ளதா என்பதேயாகும். கடந்த 20.09.2018ம் தேதி TN 57 N1496 என்ற அரசு பேருந்தை அதன் ஓட்டுனரான சாட்சி ராஜசேகரன் திண்டுக்கல் திருச்சி ரோட்டில் இருந்த

வேகத்தடையில் பேருந்தை மெதுவாக ஓட்டிச் சென்றபோது பின்னால் அதே திசையில் TN 57P 5472 Hero Honda Splendor Motor cycle-ன் பின்னால் மல்லுச்சாமியை உட்கார வைத்துக்கொண்டு எதிரி ராஜ்குமார் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று வேகத்தடையில் ஏற்றி இறக்கி கீழே விழுந்ததில் பேருந்தின் பின்சக்கரம் மல்லுச்சாமி மீது ஏறி தலை மற்றும் உடலில் பலத்த காயம்பட்டு சம்பவயிடத்திலேயே மல்லுச்சாமி இறந்துவிட்டதாகவும் எனவே எதிரி இதச 279,304(ஏ) பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரசுத்தரப்பு சாட்சியங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று எடுத்துரைக்கப்பட்டது.

8. எதிரி தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சாட்சியங்கள் முலம் நிருபிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கில் நேரடி சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும் வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் எதிரி மீதான குற்றத்தை நிருபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் எனவே எதிரிக்கு சந்தேகத்தின் பலன் அளிக்கப்பட்டு எதிரியை விடுவிக்கவேண்டும் என எடுத்துரைக்கப்பட்டது.

9. இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததில் புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள்.279, 304(A)-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை முடிக்கப்பட்டு எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள்.279, 304(A)-ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் அறியமுடிகிறது.

10. அரசு தரப்பில் விவாதத்தின் போது இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் படி வழக்கு சம்பவமானது 20.09.2018ம் தேதி 15.45 மணிக்கு நடைபெற்றுள்ளது என்றும் புகாரானது 20.09.2018ம் தேதி 17.00 மணிக்கு கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே புகார் எவ்வித காலதமாதமமும் இன்றி கொடுக்கப்பட்டுள்ளது என்று எடுத்துரைக்கப்பட்டதற்கு எதிரியின் தரப்பில் அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது போல் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் முதல் தகவல் அறிக்கை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் என்றும், ஆனால் சுமார் 1 கி.மீ துாரத்தில் உள்ள நீதிமன்றத்திற்கு 4 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை 24.09.2018ம் தேதி காலை 10.30 மணிக்கு அனுப்பப்பட்டுள்ளதற்கு அரசு தரப்பில் எவ்வித ஏற்கக்கூடிய வாதத்தையும் முன்வைக்கவில்லை என்றும், எனவே சொன்ன

தேதியில் புகார் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்பது சந்தேகம் ஏற்படும் வகையில் உள்ளது என்று எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது ஏற்கக்கூடிய வகையிலேயே உள்ளது.

11. புகார்தாரர் அ.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1ன் சாட்சியத்தினையும், கொடுத்துள்ள புகாரினையும் பரிசீலனை செய்ததில் இவ்வழக்கு விபத்திற்குள்ளான பேருந்தின் நடத்துனர் என்பதை அறியமுடிகிறது. அ.சா.1 கொடுத்துள்ள புகாரில் " சீலப்பாடி பைபாஸ் அருகே உள்ள வேகத்தடையில் ஏற்றி இறக்கி மெதுவாக சென்ற போது " பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் வேகத்தடை இருப்பதை கவனிக்காமல் பேருந்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார். ஆனால் அரசு தரப்பு வழக்கின் படி பேருந்து வேகத்தடையில் ஏறி இறங்கிகொண்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டதாக உள்ளது.

12. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் சத்தம் கேட்ட பிறகு கீழே இறங்கி பார்த்த பிறகு தான் நடந்த விபரம் பற்றி தெரியும் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ன் சாட்சியத்தின் படி அ.சா.1 சம்பவத்தை நேரடியாக பார்த்தாரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது என்ற எதிரி தரப்பு விவாதம் ஏற்கக்கூடியதாகவே உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

13. அ.சா.2 தனது முதல் விசாரணையில் நான் டீ கடையில் நின்று கொண்டிருந்த போது பேருந்தின் முன்வீல் வேகத்தடையில் ஏறி இறங்கியிருந்தது அப்போது பேருந்தின் இடது புறம் இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் பேருந்தினை இடதுபுறமாக முந்தி செல்ல முயன்ற போது இருசக்கர வாகனத்தில் பின்புறம் இருந்த நபர் பேருந்தின் பின்சக்கரத்தில் அடியில் மாட்டிக்கொண்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2ன் சாட்சியமானது யாார் கவனக்குறைவாக வாகனத்தினை ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது அல்லது யார் வாகனத்தினை அதிவேகமாக ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் இல்லை என்பதை அறியமுடிகிறது.

14. அ.சா.3 இவ்வழக்கு விபத்தில் ஈடுபட்ட பேருந்தின் ஓட்டுனர் ஆவார். அ.சா.3 தனது முதல் விசாரணையில் இரு சக்கர வாகனத்தில் ராஜ்குமார் என்பவர் வாகனத்தினை ஓட்டிவந்து வேகத்தடையில் ஏறி இறங்கும் போது இரு சக்கர வாகதத்தில் பின்னால் இருந்த நபர் நிலை தடுமாறி பேருந்தின் பின் பக்க சக்கரத்தின் அடியில் மாட்டிக்கொண்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3ன் சாட்சியமும் யாார் கவனக்குறைவாக வாகனத்தினை ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது அல்லது யார்

வாகனத்தினை அதிவேகமாக ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் இல்லை என்பதை அறியமுடிகிறது.

15. அ.சா.4 அரசு தரப்பு வழக்கின் படி கண்ணுற்ற சாட்சி ஆவார். அ.சா.4 தனது சாட்சியத்தில் புகாரில் சொல்லியுள்ளதற்கு மாறாக வேகத்தடை அருகே வரும்போது பேருந்து முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்தார்கள் வண்டியை ஓட்டி வந்தவர் வண்டி கீழே விழுந்ததும் விழுந்துவிட்டார் என்று முற்றிலும் மாறாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.4ன் சாட்சியமும் சந்தேகம் ஏற்படும் படி உள்ளது என்ற எதிரி தரப்பு விவாதம் ஏற்கக்கூடியதாகவே உள்ளது.

16. அ.சா.5, அ.சா.6 ஆகிய சாட்சிகள் பார்வை மகஜர் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.5, அ.சா.6 ஆகியோர் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்தினை பார்வையிட்டு மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்பதை உறுதிபடுத்தும் வகையில் மட்டும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

17. அ.சா.7 புகாரைப் பெற்று வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர் ஆவார். அ.சா.8 இவ்வழக்கில் விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் ஆவார். அ.சா.9 இவ்வழக்கில் இறந்த நபரினை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஆவார். அ.சா.11 இறந்த நபரின் உடலை பிரேத பரிசோதனையின் போது மருத்துவருக்கு அடையாளம் காட்டியும், பின்னர் உறவினர் வசம் ஒப்படைத்த காவலர் ஆவார். அ.சா.12 பதிவு செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த முதல் தகவல் அறிக்கையின் படி வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த புலன் விசாரணை அதிகாரி ஆவார். மேற்படி சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரி ஓட்டி வந்த வாகனத்தில் இயந்திர கோளாறு இல்லை என்பதையும் விபத்தில் இருவருக்கு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை மட்டும் அறிய முடிகிறது.

18. எதிரி தரப்பில் எதிரி வாகனத்தை ஓட்டவில்லை என்று கட்சி எதுவும் எடுக்கவில்லை மாறாக எதிரி அவர் ஓட்டி வந்த வாகனத்தை கவனக்குறைவாகவோ அல்லது அதிவேகமாகவோ ஓட்டிவரவில்லை என்று கட்சி எடுத்துள்ளதாலும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1முதல் அ.சா.4 சாட்சிகள் புகாரில் சொல்லியுள்ளவாறு சம்பவம் நடைபெற்றது என்பதை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும் அ.சா.7 முதல் அ.சா.12 வரைஉள்ள சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கக்கூடிய வகையில் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

19. இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களிலிருந்து எதிரி தான் ஓட்டி வந்த வாகனத்தை அதிவேகமாகவோ அல்லது கவனக்குறைவாகவோ ஓட்டி வந்து ஒரு நபருக்கு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை சந்தேகமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்பதால் எதிரிக்கு சந்தேகத்தின் பலனை அளித்து எதிரி இவ்வழக்கில் தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**20. தீர்ப்பு பகரப்பட்டது :** முடிவாக எதிரிக்கு எதிராக சட்டப் பிரிவுகள். 279, 304(A) I.P.C—ன் படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால் எதிரியை மேற்படி பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு.255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கின்றது.

இவ்வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று (04.01.2020) இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

(Sd.M.Murugan,M.L.)
நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்

பின் இணைப்பு :

**01. அரசு தரப்பு சாட்சிகள் :**

| | |
|---|---|
| அ.சா.1 | கனகராஜ் |
| அ.சா.2. | அனந்தராமன் |
| அ.சா.3 | ராஜசேகரன் |
| அ.சா.4 | செந்தில்குமார் |
| அ.சா.5 | ஜோஸ்வா |
| அ.சா.6 | முருகன் |
| அ.சா.7 | முரளி |
| அ.சா.8 | விஜயகுமார் |

**<u>02. அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ,1. | 20.09.2018 | புகார் |
| அ.த.சா.ஆ,.2. | 21.09.2018 | பார்வைமகஜரில் உள்ள 1வது கையொப்பம் |
| அ.த.சா.ஆ,3. | 21.09.2018 | பார்வைமகஜரில் உள்ள 2வது கையொப்பம் |
| அ.த.சா.ஆ,4. | 20.09.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ,5. | 24.09.2018 | TN 57 N 1496 -மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ,6. | 26.09.2018 | TN 57 P 5472-மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ.7 | 21.09.2018 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.த.சா.ஆ.8 | 21.09.2018 | பார்வைமகஜர் |
| அ.த.சா.ஆ.9 | 21.09.2018 | வரைபடம் |
| அ.த.சா.ஆ.10 | 21.09.2018 | பிரேதவிசாரணை அறிக்கை |

**03. அரசு தரப்பு சான்றுப் பொருள்- இல்லை.**

**04. எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள், சான்றுப் பொருள் இல்லை.**

குறிப்பு :

1. விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
2. தீர்ப்பின் சாராம்சம் போலீசாருக்கு தெரிவிக்கப்பட்டது
3. எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை

(Sd.M.Murugan,M.L.)

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்

- உண்மை நகல் -

நீதித்துறை நடுவர் எண் 1
திண்டுக்கல்

**CALENDAR AND JUDGMENT**

(For use in cases whether there are more accused persons than one)

District of Dindigul

Calender of cases tried by the Judicial Magistrate No.1, Dindigul

**C.C.No. 71/2019**

| DATE OF | | | | | | | Explanation of Delay and Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| Offence | Report of Complaint | Apprehen-sion of accused | Release on bail | Commence-ment of trial | Close of Trial | Sentence or Order | மு.த.அ.நாள் : 20.09.2018<br>மு.த.அ..வ.நாள்: 24.09.2018<br>கு.ப.நாள் : 17.11.2018<br>கு.ப.வ.நாள் : 02.01.2019<br>வ.கோ.எ.நாள் : 03.01.2019 |
| 20.09.2019 | 20.09.2018 | 22.09.2018 | 22.09.2018 | 05.08.2019 | 30.09.2019 | 04.01.2020 | |

Judgement in **C.C.71/2019** On the file of the Judicial Magistrate No.1 Dindigul

COMPLAINANT: திண்டுக்கல் தாலுகா காவல் ஆய்வாளர் : Police Station: திண்டுக்கல் தாலுகா காவல்நிலையம் in Crime No.629/2018

| Name of accused | Age | Father's /Wife Name |
|---|---|---|
| ராஜ்குமார் | 26 /18 | பெருமாள் |

| Caste or religion | Calling | Residence | Taluk & District |
|---|---|---|---|
| இந்து | வியாபாரம் | கருதனம்பட்டி,சீலப்பாடி, திண்டுக்கல் | திண்டுக்கல் தாலுகா /மாவட்டம் |

Offence: இதச பிரிவுகள்.279,304(ஏ) கீழான குற்றம்

Finding: எதிரிக்கு எதிராக சட்டப் பிரிவுகள். 279, 304(A) I.P.C–ன் படி சுமத்தப்பட்ட

Sentence: குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால் எதிரியை மேற்படி பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.
எதிரியை கு.வி.மு.ச பிரிவு.255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கின்றது.
இவ்வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்

of Receipt

Crl.J.47

Remarks of the Chief Judicial Magistrate
Dindigul

From

The Judicial Magistrate No.1
Dindigul

To

The Chief Judicial Magistrate,
Dindigul

Through

The Judicial Magistrate No.1
Dindigul

C.C.No. 71 /2019
Date of Judgement: 04.01.2020

Date of Despatch
Calender of 2020

Date of Receipt

Date of Despatch

Date of Receipt

REMARKS OF THE JUDICIAL MAGISTRATE

REPLY OF THE MAGISTRATE

Date of Despatch

---

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்

சீரான/ வரைவு **தீர்ப்புரை**

**C.C.NO. 71 /2019**

நாள் : 04.01.2020

---

CC.No : 71 /2019

தீர்ப்பு நாள் : 04.01.2020

எதிரி ஆஜர்.

தீர்ப்புரைபகரப்பட்டது. முடிவாக எதிரிக்கு எதிராக சட்டப் பிரிவுகள். 279, 304(A) I.P.C—ன் படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால் எதிரியை மேற்படி பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு.255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கின்றது.

இவ்வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்